# அரசினர் மேல்நிலைப் பள்ளி, செண்டுவாரை, மூணார்.

## கல்விசார் முதன்மைத் திட்டம் 2025-26

இடுக்கி மாவட்டம், தேவிகுளம் ஊராட்சிக்கு உட்பட்ட செண்டுவாரைப் பகுதியில் அமைந்துள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளியின் கல்விசார் முதன்மைத் திட்டம் 2025-26, கீழ்க்காணும் கூறுகளைக் கொண்டு இக்கல்வியாண்டில் செயல்பட முடிவு செய்துள்ளது.

**பார்வையும் பணியும்**

**பார்வை:**

மாணவர்களுக்குத் தரமான கல்வி, விமர்சன சிந்தனை வளர்ச்சி பெறுதல் மற்றும் வாழ்க்கைத் திறன்களை வலுப்படுத்தி அவர்களை எதிர்கால முயற்சிகளில் வெற்றி பெறச் செய்வது என்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

**பணி :**

இக்கல்வியாண்டின் முக்கியப் பணியாகக் கல்விச் சிறப்பு, படைப்பாற்றல் மற்றும் சமூகப் பொறுப்பு முதலியவற்றை ஊக்குவிப்பதற்கு ஆதரவான கற்றல் சூழலை வழங்குவது.

**இலக்கு மற்றும் நோக்கங்கள் :**

**கல்விச் சிறப்பு :**

- அடிப்படையானதும் மற்றும் முக்கியப் பாடங்களில் மாணவர்களின் முன்னேற்றத்தை மேம்படுத்தல்.
- புதுமையான கற்பித்தல் முறைகள் மூலம் கற்பித்தல் - கற்றல் செயல்பாடுகளை மேம்படுத்தல்.
- விமர்சன சிந்தனை, படைப்பாற்றல், சிக்கல்களைத் தீர்க்கும் திறன், பரிசோதனை முயற்சி முதலியவற்றை ஊக்குவித்தல்.
- தொழில் அடிப்படையிலான ஒருங்கிணைந்த கல்வி, கலைக்கல்வி மற்றும் செயல்பாட்டுக் கல்வி வழி கற்றலை ஊக்குவித்தல்.
- சமூகத்தினூடாக தொடர்புகளை ஏற்படுத்தி மனவளர்ச்சி அடைதல்.
- பெற்றோர் மற்றும் மூத்தோர் உடனான உறவுகளைப் புரிந்து கொண்டு உறவுகளைப் பலப்படுத்துதல்.

- சமூகப் பொறுப்பும், கடமையும் தன்னார்வ சேவையையும் ஊக்குவித்தல்.
- ஒட்டுமொத்த முழுமையான வளர்ச்சி.

**செயல்முறைகள் மற்றும் முயற்சிகள்**

**கல்வி :**

செயல்திட்ட அடிப்படையிலான கற்றல் மற்றும் செய்முறைச் செயல்பாடுகளை கற்றல் நிகழ்வுகளில் உட்படுத்திச் செயலாக்குதல். அதன் முடிவுகளை விரிவான ஆய்வுக்கு உட்படுத்துதல். பாடம் தொடர்பான சீர்மை செய்யப்பட்ட உதவி வகுப்புகள் மற்றும் கற்பித்தல் திட்டங்களை மாணவர்களுக்கு வழங்குதல்.

**சமூகம் :**

பெற்றோர் ஆசிரியர் கூட்டம், சிறப்பு தினங்களை நினைவு கூர்தல், சிறப்பு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தல் மூலம் சமூகத்திற்கும் கற்றலில் பங்களிப்பு செய்வதற்கான சூழலை உருவாக்குதல். இதன் மூலம் மாணவர்கள் சமூகத்தின் மேம்பாட்டிற்கு பங்களிப்பு செய்ய இயலும்.

**கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு :**

ஆசிரியர்கள் முன்னெடுக்கும் செயல்திட்ட மாதிரிகள், அரசு கையளிக்கும் கல்வித் திட்டங்கள் மூலம் மாணவர்களின் கற்றலில் உருவாகும் மாற்றங்கள் குறித்து அறிவியல் முறையிலான சோதனைகள் மற்றும் முடிவுகளை அறிந்து கொள்ளுதல். கற்றலில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டின் அதனை இணைத்துச் செயலாற்றுதல்.

**பிற பணிகள் :**

பள்ளியில் செயல்படுகின்ற பலதரப்பட்ட மன்றங்கள் மூலம் (சான்: விளையாட்டு, கலை, இசை,ச சூழலியல், மொழி) மாணவர்களுக்கு பாடப்பகுதி தவிர்த்த பிற கற்றல் அனுபவங்களை வழங்குதல். நேரடியான அனுபவம் மூலம் மாணாவர்களுக்குக் கிடைக்கும் தலைமைப் பண்பும், பங்கேற்புத் திறனையும் ஊக்குவித்தல்.

**கருத்துக் கொள்கைகள் :**

மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் கருத்துகளை உள்வாங்கி கற்றல் மற்றும் கற்பித்தல் முறைமைகளில்

நடைமுறைப்படுத்த இயலுகின்ற திட்ட முன்வரைவுகளை இனங்காணுதல். அவற்றை செயல்படுத்தும் சூழலை ஏற்படுத்துதல்.

**முன்னேற்ற அறிக்கை :**

பெற்றோர்களுக்கு மாணவர்களின் முன்னேற்ற அறிக்கைகளைத் தொடர்ந்து வழங்குதல். அதல் பின்னூட்டங்களை அறிந்து கொள்ளுதல். மீள் பார்வை செய்தல்.

**வளங்களும் ஆதரவுகளும் :**

பள்ளி மற்றும் மாணவர்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு நிதி மற்றும் திட்டங்களைச் செயல்படுத்த அரசு சார் துறைகள், நிறுவனங்கள் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கூட்டமைப்பு நிதி மேலாண்மை ஆகியவற்றிலிருந்து வளங்களைப் பெறுதல். பெற்ற வளங்களை சரியான விகிதத்தில் பகிர்ந்தளித்து கல்விச் செயல்பாட்டில் முன்னேற்றத்தை சாத்தியப்படுத்துதல்.

**ஆசிரியர் பயிற்சி :**

கற்பித்தல் மேம்பாட்டிற்கு அரசு நிறுவனங்கள் வழங்குகின்ற முறையான ஆசிரியர் பயிற்சி மற்றும் திட்ட ஏற்பாடுகளில் பங்கு கொள்வதற்கும் செயல்படுவதற்கும் ஆசிரியர்களுக்கு வாய்ப்புகளை வழங்குதல்.

கல்வி பெறும் மாணவர்களின் திறன்களை ஆய்வு செய்து, ஒவ்வொரு பாடத்திற்கும் தனிப்பட்ட வகையிலான ஆண்டுத்திட்டங்கள் தயாரிக்கப்படுவதற்கும், அதன் படி செயல்படுவதற்குமான வாய்ப்புகள வழங்கப்பட்டுள்ளது.

**கட்டமைப்பு :**

பயனுள்ள கற்றலுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளையும் வளங்களையும் உறுதி செய்தல். ஊராட்சி மற்றும் மாவட்ட கல்விசார் நிறுவனங்களிலிருந்து பள்ளிக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளைப் பெறுவதற்கான முயற்சி செய்தல்.

**சமூகக் கூட்டுறவுகள் :**

பள்ளியின் செயல்பாடுகளுக்கும் மாணவர்களின் கற்றல் மேம்பாட்டுத் திறன்களை வளர்ப்பதற்கும் தேவையான வளங்கள் மற்றும் அறிவார்ந்த நிகழ்வுகளை ஒருங்கிணைத்து வளர்ச்சி அடைய சமூகக் கூட்டமைப்புகளைப் பயன்படுத்துதல்.

மேற்சுட்டிய இந்தக் கல்விசார் முதன்மைத் திட்டமானது அரசினர் மேல்நிலைப்பள்ளி செண்டுவாரையில் கல்விப் பணியின் ஒட்டுமொத்த தரத்தை உயர்த்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் இது கல்விச் சிறப்பு, முழுமையான ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் சமூகப் பங்களிப்பை ஊக்குவிக்கும் என்பதில் ஐயமில்லை.

**இணைப்பு :**

மொழிப் பாடத்திற்கான ஆண்டு திட்ட மாதிரி ஒன்று இதனோடு இணைக்கப்பட்டுள்ளது.

# அரசு மேல்நிலைப் பள்ளி, செண்டுவாரை.

# ஆண்டுத் திட்டம் 2025-26

| **உயர்நிலைப் பள்ளி - தமிழ் (8,9,10 வகுப்புகள்)** | | | | **ஆசிரியர் : பிரதீப் குமார்.பி** |
|---|---|---|---|---|
| **இலக்குகள்** | **செயல்பாடுகள்** | **காலயளவு** | **துணைக் கருவிகள்** | **பொறுப்பு** |
| 1) மொழித்திறனில் பின்தங்கிய மாணவர்களை சரி செய்தல் | * முன் தேர்வு<br>* எழுத்துக்களை உறுதிப்படுத்துதல்<br>* வார்த்தை விளையாட்டுக்கள்<br>* எழுத்து அட்டைகள் வழங்குதல்<br>* வார்த்தைகள் எழுதப்பட்ட அட்டைகள் வழங்குதல்<br>* வார்த்தைகளை உருவாக்குதல்<br>* வாக்கியங்களை உருவாக்குதல்<br>* படம் - தலைப்பு<br>* படம் - கதை எழுதுதல்<br>* மொழி தொடர்பான பின்தங்கிய மாணவர்களுக்கு சிறப்பு வகுப்பு | ஜூன் - ஜூலை | புத்தகங்கள், படங்கள், வீடியோக்கள், இணையம் | மொழி ஆசிரியர் |

| | | | | |
|---|---|---|---|---|
| தினக் கொண்டாட்டம் :<br>சுற்றுச் சூழல் தினம் (05.06.2025)<br><br>வாசிப்பு தினம் (19.06.2025)<br>யோகா தினம் (21.06.2025)<br>மருத்துவர் தினம் (01.07.2025)<br>நெல்சன் மண்டேலா தினம் (18.07.2025) | படம் வரைதல், சுவரொட்டி தயாரித்தல், கவிதை, கட்டுரை எழுதுதல்.<br>புத்தக அறிமுகம், நூற்குறிப்பு தயாரித்தல்.<br>யோகா பயிற்றுநரைப் பேட்டி காணுதல் - வினாநிரல் தயாரித்தல்.<br>ஆரோக்கியக் குறிப்புகள் தயாரித்தல்.<br>வாழ்க்கைக் குறிப்பு தயார் செய்தல். | | | |
| 2) மாணவர்களைச் சிறந்த வாசகர்களாக மாற்றுதல் | * வகுப்பு வாசிப்புக் குழுக்களை உருவாக்குதல்<br>* பள்ளி நூலகத்தைப் புதுப்பித்தல்<br>* அருகிலுள்ள நூலகத்தில் உறுப்பினராதல் | ஆகஸ்ட் - அக்டோபர் | நூலகம், புத்தகங்கள், புகைப் படங்கள், இணையம், வீடியோக்கள் | மொழி ஆசிரியர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | * வாசிப்பு விழாவை ஏற்பாடு செய்தல்<br>* பத்திரிகை வாசிப்பு<br>* புத்தக கலந்துரையாடல்<br>* வாசிப்பு அனுபவம்<br>* வாசிப்பு குறிப்பு<br>* வித்யாரங்கம் கலை இலக்கிய செயல்பாடுகள்<br>* இலக்கியவாதிகளுடன் நேர்காணல்<br>* சமகால வெளியீடுகள் மற்றும் வாசிப்பு<br>* நூலகப் பயன்பாடு | | | |
| தினக் கொண்டாட்டம் :<br>உறுப்பு தான தினம் (13.08.2025)<br>மனிதநேய தினம் (19.08.2025)<br>தேசிய ஊட்டச்சத்து தினம் (01.09.2025) | விழிப்புணர்வு அட்டைகள், சுவரொட்டிகள் தயாரித்தல்.<br>முதியோர் இல்லத்திற்கு அழைத்துச் செல்லல்.<br>சிறுதானியம் மற்றும் பாரம்பரிய உணவுத் திருவிழா. | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| சர்வதேச எழுத்தறிவு தினம் (08.09.2025)<br>பாரதியார் நினைவு நாள் (11.09.2025)<br>முதியோர் தினம் (01.10.2025)<br>விலங்குகள் தினம் (04.10.2025)<br>தேசிய ஒற்றுமை தினம் (31.10.2025) | கையெழுத்து, குறுக்கெழுத்துப் போட்டி நடத்துதல்.<br>பாரதி (குறும்படம் காண்பித்தல்)<br>முதியோர் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தல்.<br>உயிர் மண்டலம் பற்றிய கவிதை எழுதுதல்.<br>முத்திரை வாக்கியம், உறுதி மொழி தயாரித்தல். | | | |
| 3) மாணவர்களைச் சிறந்த எழுத்தாளர்களாக மாற்றுதல் | * எழுத்தாளர் குழுக்களை உருவாக்குதல்<br>* புத்தக கலந்துரையாடல்<br>* வாசிப்பு குறிப்புகள், பதிப்புகள்<br>* பல்வேறு இலக்கிய வகைகளை அறிமுகப்படுத்துதல்<br>* சுவர் பத்திரிகைகள், பதிப்புகளைத் தயாரித்தல்<br>* படைப்புப் புத்தகங்களைத் தயாரித்தல் | நவம்பர் - டிசம்பர் | நூலகம், புத்தகங்கள், புகைப் படங்கள் | பெற்றோர் ஆசிரியர் சங்கம் (PTA), ஆசிரியர்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | * தனிநபர் படைப்புகள், குழுப் படைப்புகள்<br>* மொழித் திட்டம்<br>* இலக்கியவாதிகளுடன் நேர்காணல், கலந்துரையாடல்<br>* இலக்கிய-கலாச்சார புகைப்படக் கண்காட்சி | | | |
| தினக் கொண்டாட்டம் :<br>கேரளப் பிறவி தினம் (01.11.2025)<br>குழந்தைகள் தினம் (14.11.2025)<br>மாற்றுத் திறனாளி தினம் (03.12.2025)<br>பாரதியார் பிறந்த தினம் (11.12.2025)<br>விவசாயிகள் தினம் (23.12.2025) | வினாடி வினா, எனது கேரளம் (பேச்சுப் போட்டி) நடத்துதல்.<br>ஜவகர்லால் நேரு அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு எழுதுதல்.<br>தலையங்கம் எழுதுதல்.<br>பாரதி விழாக் கொண்டாட்டம்.<br>வேளாண்மை மகத்துவம் தொடர்பான சொற்பொழிவு ஆற்றுதல். | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4) மேடையை எதிர்கொள்ளும் திறன் கொண்டவர்களாக மாணவர்களை மாற்றுதல்<br><br>தினக் கொண்டாட்டம் :<br>பொங்கல் விழா (15.01.2025)<br>சர்வதேச கல்வி தினம் (24.01.2025)<br>தாய்மொழி தினம் (21.02.2025) | * பேச்சுப் பயிற்சிப் பட்டறை<br>* பல்வேறு தலைப்புகளில் பேசுவதற்குத் தயார் செய்தல்<br>* சிறந்த பேச்சுக்களின் ஆடியோ, வீடியோக்களைக் கேட்க வைத்தல்<br>* பேசப் பழகப் பொருத்தமான தளங்களை அமைத்தல்<br><br>உழவர் தின வாழ்த்து அட்டை தயாரித்தல்.<br>திருக்குறள் ஒப்புவித்தல் (கல்வி அதிகாரம்)<br>வாசிப்புப் போட்டி, உறுதிமொழி தயாரித்தல். | ஜனவரி - பிப்ரவரி | ஆடியோ, வீடியோ, இணையம் | பயிற்சியாளர், மொழி ஆசிரியர்கள் |